சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்
முன்னிலை : திருமதி.A.பர்சாத் பேகம் பி.ஏ., எம்.எல்.,
சார்பு நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்
2026ம் ஆண்டு ஜீன் மாதம் 19–ம் நாள், வெள்ளிக்கிழமை

**எச்.எம்.ஓ.பி.எண்.5/2026**
**(CNR.No.TNTT19 - 000062 - 2026)**

செந்தில் குமார் .. மனுதாரர்

/எதிர்/

1. அன்னலெட்சுமி
2. சுடலை ..எதிர்மனுதாரர்

இம்மனுவானது 19.06.2026–ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ஆறுமுகவடிவு அவர்கள் ஆஜராகி இருந்த நிலையில், எதிர்மனுதாரர் தரப்பில் படிமொ செலுத்தப்படாத நிலையிலும், மனுதாரர் அழைத்தும் ஆஜராகாத நிலையிலும், மனுதாரர் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாத நிலையிலும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ...

உத்தரவு

இம்மனுவானது மனுதாரர் மற்றும் 2 பெண் குழந்தைகளின் நலன் கருதி மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே 12.12.2010ல் நடந்த திருமணத்தை ரத்து செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும், மனுவின் செலவுத்தொகையை 1,2ம் எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு செலுத்தக்கோரியும் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**படிமொ செலுத்தப்படாமலும், மனுதாரர் அழைத்தும் ஆஜராகாததாலும், மனுதாரர் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாத காரணத்தினாலும் மனுவானது தள்ளுடிபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

2026ம் ஆண்டு ஜீன் மாதம் 19–ம் நாளிடப்பட்டது.

BARSAD BEGUM A Digitally signed by BARSAD BEGUM A Date: 2026.06.19 17:08:29 +0530

**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்.**

சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்
எச்.எம்.ஓ.பி.எண்.5/2026
நேரிய/வரைவு உத்தரவு
நாள்: 19.06.2026.